ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

मृडानि प्राप्याहं सु चरितफलीभूतममलं
प्रसिद्धे जन्माद्यक्षिति सुरकुले तस्य सदृशम् ।
नकिञ्चित्कर्तव्यं भवभयविमोक्षाय कलये
शरण्यं देवि त्वामभजमवमामाशु कृपया ॥

𑌮𑍃𑌡𑌾𑌨𑌿 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯𑌾𑌹𑌂 𑌸𑍁𑌚𑌰𑌿𑌤𑌫𑌲𑍀𑌭𑍂𑌤𑌮𑌮𑌲𑌂
𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌜𑌨𑍍𑌮𑌾𑌦𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌸𑍁𑌰𑌕𑍁𑌲𑍇 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌦𑍃𑌶𑌮𑍍 ।
𑌨𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌭𑌵𑌭𑌯𑌵𑌿𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌯 𑌕𑌲𑌯𑍇
𑌶𑌰𑌣𑍍𑌯𑌂 𑌦𑍇𑌵𑌿 𑌤𑍍𑌵𑌾𑌮𑌭𑌜𑌮𑌵𑌮𑌾𑌮𑌾𑌶𑍁 𑌕𑍃𑌪𑌯𑌾 ।

ஹே மிருடானி ஸகலப்பிராணிகளுககும் ஸுகத்தைககொடுக்கும் ஸ்ரீ பரமேசுவரனுடைய பத்னியான ஹே பார்வதி! முன் ஜன்மாக்களில் செய்யப்பட புண்யகர்மங்களுக்குப் பலபூதமாயும்சுத்தமாயுமுள்ளஜன்மாவைமிகவும்பிரஸித்திபெற்ற பிராமண குலத்தில் பெற்றும் ஸம்ஸாரத்திலேற்படும் பிறப்பிறப்பிலுண்டாகும் பயத்தைப் போக்கவேண்டி இந்த ஜன்மாவிற்கு யோக்கியமான அவச்யம் அனுஷ்டிக்க வேண்டிய கர்மாக்களில் அற்பங்கூட என்னால் செய்யப்படவில்லை. ஹே தேவி! எங்கும் பிரகாசிக்கும் மஹேசுவரீ! உன்னைச் சரணமாகவடைந்தேன். உனது இயற்கையான கருணையால் என்னை சீக்கிரமாகப் பாதுகார்ககம்வேணும்.

ஸம்ஸாரதுக்கத்தை அடியோடு விலக்குவதற்குற்ற சாஸ்திரங்களில் கூறப்பட்ட எவ்வித ஸாதனங்களையும் அனுஷ்டித்து மோக்ஷமென்கிற புருஷார்த்தத்தைப் பெறுவதற்குத் தகுதியாயுள்ள சிறந்த வேதியர் குலத்தில் நான் தோன்றியும் இந்த ஸமயம் செய்யவேண்டிய வைதிககர்மாக்களை ஒன்றையும் நன்கு அனுஷ்டிக்காமல் காலத்தை வீணாகப்போக்கிப் பராசக்தியான உன்னை என்னை ரக்ஷிக்கவேண்டுமென்று சரணமாக அடைந்தேன். கருணைக்கடலாகிய நீ கைவிடாமல் என்னைப் பாதுகார்க்கவேண்டுமென்று ஒரு பக்தன் அறிவிக்கிறான். சுபம்!

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.

பிரபவ-௵ மாசி-௴ ௧௮௨

டாக்டர் முத்துலெக்ஷ்மி ரெட்டியால் விவாஹவயது மசோதா ஆக்ஷேபணைகளுக்குக் கூறப்பட்ட பதில் சரியல்ல.

சென்ற பிப்ரவரி௴ 21௳ செவ்வாய்க் கிழமை மித்திரனில் முத்துலெக்ஷ்மி ரெட்டியால் வெளியிடப்பட்ட விவாக வயது மசோதா ஆக்ஷேபணைகளுக்குப் பதில் என்று தலையங்கமிட்ட விஷயத்தைக் கண்ணுற்றோம்.

அதில் ஹிந்து, சுதேசமித்திரன் பத்திரிகைகளைப்படிக்கும்பொழுது பார்த்து வருகின்றேன. இந்தக் கண்டனங்களைப் படிக்கும்பொழுது எனக்கு இத்தகைய வீண் கண்டனங்களில் இறங்கியிருப்பவர்களின் மூட நம்பிக்கையுடன் கூடிய அறியாமையையும் இக்குரூரமான கருணையற்ற வழக்கத்தினுல் அவதிப்படும் அபலைகளின் பரிதபிக்கத்தக்க நிலைமையையும் நினைத்துப் பார்ப்பதுண்டு. அச்சமயங்களிலெல்லாம் துக்கமும், பரிதாபமும்எப்பொழுதாவது மனச்சோர்வும் என்னைமேலிடுவதுண்டு. லேடிஸதாசிவய்யர், மிஸிஸ் சந்திரசேகரய்யர் இவர்கள்போன்ற அனுபவம்வாய்ந்த பெரியோர்கள் முதல் பள்ளிக்கூடம்சென்றுவரும்பெண்கள்வரையிலுள்ள படித்த ஸ்திரீகள் எல்லாரும் இந்நாட்டில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் குற்றமற்ற ஸ்திரீகளுக்காக தெளிவாகவும் தீவ்ரமாகவும் வாதாடி வருகையில் பிராமண ஸமூஹத்திலுள்ள ஸர்வகலாசாலைப் பட்டதாரிகளும் கூடத் தங்கள் ஸமூஹத்திலுள்ளவருந்தத்தக்க நிலையைச்சற்றுமமதியாமல் புராதனமாயும் தற்காலத்திற்கேற்றதல்லாததாயுமுள்ள சாஸ்திரங்களிலிருந்து மேற்கோள்களை எடுத்துரைக்க முன் வந்திருப்பதைக் கண்டு நான் மிகுந்த ஏமாற்றமும் வருத்தமும் அடைகிறேன் என்று கூறப்பட்டிருக்கின்றது.

இதில் இத்தகைய வீண்கண்டனங்களில் இறங்கியிருப்பவர்களின் மூடநம்பிக்கையுடன் கூடிய அறியாமையையும் என்று எழுதப்பட்டிருக்கிறது. இது சரியல்ல இக்கண்டனங்களை வீண் கண்டனங்கள் என்று சொல்வதற்கு யாது காரணம். 1. தற்காலம் நடைபெறும விவாகங்கள் விதியை அனுஸரித்ததில்லையென்ற ? 2. அல்லது பெரியோர்களால் அனுஷ்டிக்கப்படவில்லை

யென்று? 3. அல்லது உலகக்ஷேமத்திற்கு இவைகள் இடையூராக இருக்கின்றனவென்று? அல்லது டாக்டர் முத்துலெக்ஷ்மி முதலான சிலருக்கு இவ்விதம் நடத்துவதில் திருப்தியில்லாததாலா.

இப்பொழுதும் நடைபெறும் விவாஹகங்களுக்குச் சரியான ப்ரமாணங்கள் இல்லையென்பது தவறேயாகும். ஸகல சாஸ்திரங்களும்

विवाहस्त्वष्टवर्षाया: कन्यायास्तु प्रशस्यते ।

விவாஹஸ்த்வஷ்டவர்ஷாயா: கந்யாயாஸ்து ப்ரஶஸ்யதே ॥

என்கிற இதுபோன்ற வசனங்களால் பால்ய விவாஹத்தையே அவச்யம் நடத்த வேண்டுமென்றும் அதினால்தான் இம்மையிலும் மறுமையிலும் அதிகமான சிரேயஸ்ஸைப் பெறலாமென்றும் கூறியிருக்கின்றனவென்று நம் ஆர்யதர்மத்தில் பன்முறை எம்மாலும் மற்றும் சில பண்டிதர்களாலும் விஸ்தாரமாக வரையப்பட்டிருப்பதால் மீண்டும் இங்கு அதை விசாரிக்க வேண்டிய அவச்யமில்லை என்று விடுகிறோம். இதினால் சாஸ்திரங்களுக்கு விரோதமாயிருக்கென்று சொல்ல முடியாதென்று ஏற்பட்டது.

2. பெரியோர்கள் இவ்விதம் அனுஷ்டிக்கவில்லைஎன்பதும்ஸரியல்ல?

பெரியோர்கள் என்றால் மனு, யாக்ஞவல்கியர், பராசரர், வஸிஷ்டர் முதலான மஹரிஷிகளும் அவர்களுக்குப்பின் வந்தவர்களும் ஆவார்கள் இவ்விதம் விவாகத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்று ஸ்மிருதிகளில் வெளியிட்டிருப்பதால் மஹரிஷிகளுக்குப் பூர்ண திருப்தியும், இவ்விதமேதான் அவச்யம் நடத்த வேண்டுமென்றும் அபிப்பிராயமென்று ஸ்பஷ்டமாகத் தெரிகின்றது. மஹர்ஷிகாலம் முதல் இன்றுவரையில் உலகிலுள்ள யாவரும் பால்ய விவாகத்தையே நடத்திவந்திருக்கிறார்கள். ஒரு மஹரிஷியும் ஸ்ரீராமரும் இவ்விதமே நடத்தியிருப்பதாக சாந்தோக்ய உபநிஷத்திலும், ஸ்ரீமத் ராமாயணம் முதலான கிரந்தங்களிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆகையால் சிஷ்டர்களால் அனுஷ்டிக்கப் படவில்லை என்று கூறுவதும் தவறேயாகும்.

3. உலக நன்மைக்கு இவ்விவாஹம் பொருத்தமாயில்லை என்பதும் விருத்தமாகத்தான் ஆகும்.

இந்த பால்ய விவாஹத்தால் உலகிற்குக் கெடுதலேற்படுகிறதென்று எப்படி இவர்கள் கண்டு பிடித்தார்களோதெரியவில்லை 1. சாஸ்திரத்தாலா. 2. அனுபவத்தாலா. 3. யுக்தியாலா அல்லது சிறந்த தமது தவத்தின் வலிமையாலேற்பட்ட ஞானதிருஷ்டியாலா?

1. லோகக்ஷேமத்தின்பொருட்டு அவதரித்த கருணைக்கடலான மஹான்கள் இதை அவசியம் செய்யவேண்டுமென்று வற்புருத்திச்செய்யாவிட்டால் பலகெடுதல்கள் ஸம்பவிக்குமென்று ஸ்பஷ்டமாக சாஸ்திரங்களில் செப்பியிருப்பதால் சாஸ்திரரீதியாய் பால்ய விவாஹத்தை அனுஷ்டிக்காவிட்டால் மாத்திரம் கெடுதி ஸம்பவிக்குமேயல்லாமல் அனுஷ்டித்தால்தான் க்ஷேமம் என்பதும் நிச்சயமாய்த் தெரிகின்றது.

2 அனுபவத்தால் சொல்லுகிறோமென்பதும் சரியல்ல.

அனுபவமென்றால் தற்காலம் பலஸ்திரீகள் 12-வது வயதில் ஒரு குழந்தைக்குத் தாயாராகி அதினால் அவர்களுக்குப் பலக்குறைவும் அடிக்கடி ரோகமும் ஏற்படுகின்றது. சிசுக்களுக்கும் ரோகம் பலக்குறைவு முதலானவைகள் ஏற்படுகின்றன என்பவை போன்ற பல இன்னல்கள் தற்காலம் உலகிலிருக்கென்பதை யாவரும் அனுபவிக்கிறார்கள். இவைகளுக்குக் காரணம் இந்த பால்ய விவாகமே. இதை நிருத்தினால் இவ்வித கஷ்டங்கள் நமக்கு நேராது என்று அறிந்து சொல்லுகிறோம் என்பதேயாகும்.

தற்காலம் உலகத்திற்குப்பல கஷ்டங்கள் நேர்ந்திருக்கின்றனவென்பது உண்மையே அந்தக்கஷ்டங்கள் இந்த விவாகத்தால் தான் என்று எப்படிக் கூறமுடியும். அனாதிகாலம் தொடங்கி அதாவது பல்லாயிரக்கணக்கான வருஷங்களாக அனுஷ்டானத்திலும் அனுபவத்திலும் இருந்துவரும் இந்த பால்ய விவாகமானது இதுவரையில் தேசத்தின் க்ஷேமத்திற்குக் காரணமாயிருந்தது. தற்காலம் மாத்திரம் தேசத்திற்குக் கஷ்டத்தை யுண்டுபண்கிறது என்று எந்த அறிவுள்ளவனும் கூற முன் வரமாட்டான். கற்கண்டு வெகுகாலமாகத் தித்திப்பாகத்தானிருந்தது. தற்காலம் கசப்பாக இருக்கிறதென்று ஒருவன் சொல்வானேயாகில் அவன் நாக்கில் ஏதோ தோஷமேற்பட்டிருக்கிறது அதற்குச் சீக்கிரம் வைத்தியம் செய்ய வேண்டுமென்பதைப் போல் முப்பது வருஷத்திற்கு முன் வரையில் ஜனங்களுக்கு க்ஷேமத்தைக்கொடுத்த பால்ய விவாகம் தற்காலம் கஷ்டங்களைச் கொடுக்கிறதென்று ஒருவர் சொல்ல முன் வந்தால் அவருடைய புத்திக்கு ஏற்பட்ட வித்யாஸத்தைத் தவிர விவாகத்தில் தோஷத்தைக் கூற எப்படி முடியும். இவ்வித கஷ்டத்துக்குக் காரணமான விவாகத்தையா லோக

க்ஷேமார்த்தமாயவதரித்த மஹரிஷிமண்டலங்கள் நமது க்ஷேமத்தின் பொருட்டு அனுஷ்டிக்கவேண்டுமென்று சாஸ்திரங்களில் உபதேசித்திருக்கிறார்கள். நம் முன்னோர்களும் இதையறியாமலா இதுவரையில் அனுஷ்டித்து க்ஷேமத்தைப் பெற்றிருக்கிறார்கள். கருணைக் கடலான மஹரிஷிகளுக்கும் அந்தந்தப் பெண்களின் தாய்த் தந்தைகளுக்கு குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய அபிமானம் இல்லையென்று டாக்டர் முத்துலெக்ஷ்மிக்கும் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கும் நம் குழந்தைகளை சாஸ்திரானுஷ்டானங்களுக்கு நேர்மாறுதலாய் ரக்ஷிக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் அபாரமான கருணையைப்பார்க்கும்பொழுதுமிகவும் ஆச்சரியமாயிருக்கிறது, அந்தோ கலியின் விந்தை ! அனுபவத்தால் பால்ய விவாகம் கஷ்டத்திற்குக் காரணமென்பதும் உசிதமல்ல.

3. யுக்தியால் சொல்லுகிறோமென்றால் அதுவும் பொருந்தாது ?

யுக்தியென்றால் அனுமானப்ரமாணம் அதாவது பால்ய விவாகமென்கிறகாரணத்தால்விதவாபி விருத்திரோகம் முதலான கார்யங்கள் ஏற்படுகின்றன. இந்தக் காரணத்தை ஒழித்துவிட்டால் துக்ககரமான அந்தக்காரியங்கள் ஏற்படாதென்று சொல்ல வேண்டும்.

பால்ய விவாகமென்கிற காரணத்தால் இந்தக்காரியம் ஏற்படுவதாயிருந்தால் பால்யவிவாஹம் ஏற்பட்டகாலம்முதல் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிருக்கவேண்டும். அப்படி ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. மேலும் பால்யவிவாஹமில்லாத இடங்களில் காரணமில்லாதபடியால் விதவாபிவிருத்தி ரோகம் முதலிய கஷ்ட ரூபமான கார்யங்கள் ஏற்படக் கூடாது அந்த நியமமும் சொல்ல முடியாது 16, 18 வயதானபிறகு விவாஹம் செய்கிற ஸ்திரீகளிடங்களிலும் வைதவ்யமும் ரோகமும் காணப்படுகின்றது. பால்ய விவாஹத்தை அனுஷ்டிக்கும் பல ஸ்திரீகளிடம் காரணமிருந்தும் கார்யமான இந்தக்கஷ்டங்களில்லாமலே இருக்கின்றனஆகையால் அன்வயவ்யதிரேகமென்கிற சாஸ்திர நியாயத்திற்குச் சற்றும் பொருத்தமில்லாத இந்த யுக்திகுயுக்தியேயல்லாமல்இதை அற்பமேனும் அறிஞர்கள் அங்கீகரிக்க முன் வரமாட்டார்கள்

என்பது திண்ணம் ஆனால் தற்காலம் ஸ்திரீகளிடம் வைதவ்யமும் ரோகமும் அதிகமாகயிருக்கிறதென்பது உண்மையே அதற்குச் சரியான காரணத்தைக் கூராமல் பால்ய விவாகத்தைக் காரணமாகக் கூறியது தவறென்று நாம் அறிவிக்கிறோம். இதற்குச் சரியான காரணம் எதென்றுதான் உங்கள் அபிப்பிராயமென்றால் கேட்டால் கூறுகிறோம் அவச்யம் செய்யவேண்டிய வேதாத்தியனத்தைச் செய்யாததினாலும் அவரவர்களுக்குரிய ஜாதி வர்ணாச்ரமங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை நல்ல ஆசாரத்துடன் பரிசுத்தனாகயிருந்து அனுஷ்டிக்காததாலும் சேம்பேரியாகக்கண்டவிடங்களில் விதிவிலக்கில்லாமல் செல்லுவதாலும் தமக்குரிய ஆகார நியமங்களை அடியோடு விலக்கி நம் சரீர அமைப்புக்குப் பொருந்தாத விபரீத ஆகாரங்களை எந்தவிடங்களிலும் தோன்றியபடியெல்லாம் புசிப்பதாலும் பல ரோகங்களும் அகால மரணங்களும் ஏற்படுகின்றனவென்று

अनध्ययनाच्च वेदानामाचारस्यच वर्जनात् ।
आलस्यादन्नदोषाच्च मृत्युर्विप्रान् जिघांसति ॥

𑌅𑌨𑌧𑍍𑌯𑌯𑌨𑌾𑌚𑍍𑌚 𑌵𑍇𑌦𑌾𑌨𑌾𑌮𑌾𑌚𑌾𑌰𑌸𑍍𑌯𑌚 𑌵𑌰𑍍𑌜𑌨𑌾𑌤𑍍 ।
𑌆𑌲𑌸𑍍𑌯𑌾𑌦𑌨𑍍𑌨𑌦𑍋𑌷𑌾𑌚𑍍𑌚 𑌮𑍃𑌤𑍍𑌯𑍁𑌰𑍍𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑍍 𑌜𑌿𑌘𑌾𑌂𑌸𑌤𑌿 ॥

இந்த வசனத்தால் மனு ஸ்பஷ்டமாய் அறிவித்திருக்கிறார் இந்த அபிப்பிராயத்தையே கீதா சாஸ்திரத்திலும்,

स्वे स्वे कर्मण्याभिरतस्संसिद्धिं लभते नरः ।
स्वधर्ममपिचावेक्ष्यनविकंपितुमर्हसि ।

𑌸𑍍𑌵𑍇 𑌸𑍍𑌵𑍇 𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑌭𑌿𑌰𑌤𑌸𑍍𑌸𑌂𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌂 𑌲𑌭𑌤𑍇 𑌨𑌰𑌃 ।
𑌸𑍍𑌵𑌧𑌰𑍍𑌮𑌮𑌪𑌿𑌚𑌾𑌵𑍇𑌕𑍍𑌷𑍍𑌯 𑌨𑌵𑌿𑌕𑌂𑌪𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌸𑌿 ।

இதுபோன்ற வசனங்களால் நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார் இவ்விதமே சரகஸம்ஹிதை என்கிற வைத்திய நூலில் பதஞ்சலி பகவானும் நன்குவெளியிட்டிருக்கிறார் ஆகையால் ஆகாரம், ஆசாரம் தர்மானுஷ்டானம் இவைகளின் நியமக் குறைவால் தான் பல கஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன அவைகளைச்சரியாய் நடக்கும்படி செய்தால் இக்கஷ்டங்கள் தீருமேயல்லாமல் அற்பமாகவாவது நடைபெற்றுவரும் விவாகம் முதலிய தர்மானுஷ்டானத்

ளைக் கெடுத்தால் இன்னும் அதிகமான கஷ்டங்கள் நேரும்ஆகை யால் ஆபாஸமான யுக்தியைக்கொண்டு பால்ய விவாஹம்ஸரியல்ல வென்று மறுப்பது தவறேயாகும்

4. ஒருவிதப் பிரமாணங்களையும் நாங்கள் எதிர்பார்க்காமல் எங்கள் புத்தியில் இவ்விதம் தோன்றிற்று. அதை அனுஷ்டானத் திற்குக் கொண்டுவரவேண்டுமென்று இவ்விதம் சொல்லுகிறோ மென்றால் இதற்கு யாரும் பதிலுரைக்க நியாயமில்லை. ஆனாலும் இவர்களைக் காட்டிலும் புத்திமான்களாயும் அதிக எண்ணிக்கை யுடையவர்களுமான கோடிக்கணக்கான ஜனங்கள் பால்யவிவா ஹம்தான் லோகக்ஷேமத்தைக் கொடுக்குமென்று நாங்கள் அபிப் பிராயப்படுகிறோமென்றால் உங்களபிப்பிராயம் ஸரியல்லவென்று இவர்களால் எப்படிக் கூறமுடியும்? ஒரு பிரமாணத்திலும் கட்டுப் படாமல் செய்யும் வியவகாரம் நிலைபெறாதென்பதை ஏன் இவர் கவனிக்கவில்லையோ தெரியவில்லை. இதுவும் இவர்கள் கருதுவது தவறென்றே தள்ளப்பட்டது.

இங்கு கூறப்பட்ட ஸமாதானத்தால் துவக்கத்தில் கிளப்பிய நான்காவது வினாவிற்கும் விடை ஏற்பட்டுவிட்டபடியால் அதை விசாரிக்காமல் விடுகிறோம். இதுவரையில் செய்த விசாரத்தால் பால்யவிவாஹம் அவச்யம என்றும் சாஸ்திரசிஷ்டாசாரங்களுக் குற்றதென்றும் அதினால் யாதொரு கஷ்டமும் ஏற்பட நியாய மில்லை என்றும் ஸ்பஷ்டமாய் தெரியும்பொழுது இவைகளைச் சற் றும் உற்றுநோக்காமல் பால்யவிவாஹத்தை நிறுத்தினால் லோகத் திற்கு க்ஷேமமுண்டாகுமென்று அறியாமையால் மூடநம்பிக்கை யுடன் வீணான மசோதாவைக் கொண்டுவந்து ஜனங்களையும் அரசாங்கத்தாரையும் எதற்காகக் கஷ்டப்படுத்துகிறார்களோ தெரியவில்லை.

பிறகு பிராமண ஸமூகத்திலுள்ள ஸர்வகலாசாலை பட்டதாரிகளும் கூட தங்கள் ஸமூகத்திலுள்ள வருந்தத்தக்க நிலையைச் சற்றும் மதியாமல் புராதனமாயும் தற்காலத்திற்குற்றதல்லாதாயுமுள்ள சாஸ்திரங்களிலிரு ந்து மேற்கோளை எடுத்துரைக்க முன்வந்திருப்பதைக்கொண்டு நான மிகுந்த ஏமாற்றமும் வருத்தமுமடைகிறேன் என்றும் சொல்லப்பட்டிருக் கிறது.

ஸர்வகலாசாலையில் பட்டத்தைப் பெற்றுவிட்டால் உடனே அவர்கள் தம் ஜாதி, குலம், அதற்குற்ற தர்மம், பாபம், புண்யம்,

ஒன்றையும் கவனியாமல் டாக்டர் முத்துலக்ஷ்மி முதலானவர்களால் கூறப்படும் ஜனங்களுக்கு அதிக கஷ்டத்திற்குக் காரணமான அபிப்பிராயத்தையே பின்பற்றவேண்டுமென்கிற அவச்யமுண்டா? இவ்விதக் கெட்டகாரியக்களில் அவர்களும் பிரவேசிக்கவேண்டியா பட்டமளிக்கப்பட்டிருக்கின்றது.

பட்டதாரிகளாயிருந்தும் தங்கள் மதத்திலுள்ள வருந்தத்தக்க நிலையை சற்றும் மதியாமல் என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவர்களைப்போல் விதிவிலக்குகளுக்குள்படாமல் தோன்றியபடி எல்லாம் தம் அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ய அவர்கள் முன்வரவில்லையென்றும் பிறருக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டத்தை அவர்கள் அறியவில்லை, நாங்கள் எங்களுடைய புத்திசக்தியால் அதையறிந்து இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறோமென்றும் தமது பெருமையைக் காண்பித்திருக்கிறார்; பல ஜனங்களுக்குக் கஷ்டத்தை யளிக்கும் இந்தக்காரியத்தில் நாம் பிரவேசிப்பது மிகவும் தவறென்பதை அற்பம்கூட அறியாமல் பிறர்பேரில் குறைகூறவும் முன்வந்துவிட்டார்.

புராதனமாயும் தற்காலத்திற்குற்றதல்லாததாயுமுள்ள சாஸதிரங்களிலிருந்து மேற்கோளை எடுத்துரைக்க முன்வந்திருபபதைக்கொணடு நான் மிகுந்த ஏமாற்றமும் வருத்தமுமடைகிறேன் என்கிறார்.

புராதனமான நம் சாஸ்திரங்கள் தற்காலத்திற்குற்றவைகளல்ல என்று தைர்யமாய் கூற முன்வந்திருப்பதைப் பார்த்தால் டாக்டர் முத்துலக்ஷ்மிக்கு நம் சாஸதிரங்களில் விசேஷபாண்டித்தியமிருக்கென்று நன்கு வெளியாகின்றது; நேற்றுவரையில் பொருத்தமாயிருந்துவந்த சாஸ்திரங்கள் டாக்டர் முத்துலக்ஷ்மிக்குச் சட்டஸபையில் மெம்பர் ஸ்தானம் கிடைத்தவுடன் பொருத்தமாகாமல் போனதற்கு யாது காரணமென்று பலவாறு யோஜித்தும் புலப்படவில்லை, தம் தவத்தின் மஹிமையால் விசேஷசக்தி வாய்ந்த பல மஹரிஷிகள் தற்காலத்திற்கும் பொருந்தும்படி நாங்கள் எழுதியிருக்கிறோமென்று ஜனங்களின் க்ஷேமத்தைக்கருதி வெளியிட்டிருக்கும் சாஸ்திரங்களை மஹரிஷிகளைக் காட்டிலும் தம்மைச் சிறந்த அறிவாளியாக நினைத்து அந்த சாஸ்திரங்கள் இக்காலத்திற்குற்றவைகளல்லவென்று நாம் சொன்னால்நம்வார்த்தையில் ஜனங்களுக்கு எவ்வளவு மதிப்பு ஏற்படுமென்பதை நம்முத்துலக்ஷ்மிரெட்டியார் ஏன் கவனிக்கவில்லையோ தெரியவில்லை ஒரு

பிரமாணத்தையும் எதிர்பாராமல் தம் மனதில் தோன்றுவதையே இவர் சிறந்த தர்மமாகக் கருதி உபதேசிக்க முன் வருவதுபோல் அவரவரும் தமக்குத் தோன்றியதையெல்லாம் உபதேசிக்க முன் வந்தால் உலகில் தர்மாதர்ம வியவஸ்தை எங்ஙனம் நிலைபெறும் இவ்விதம் சாஸ்திராசார விருத்தமான மசோதாவைக் கொண்டு வருவது ஸரியல்லவென்று ஆஸ்திகர்கள் தகுந்த மேற்கோளுடன் நிரூபித்தால் அதை அங்கீகரிக்காமலும் சிறந்த பிரமாணங்களால் அதற்கு மறுமொழி கூறாமலும் நான் வருத்தமடைகிறேன் என்று எழுதினால் இவருடைய வருத்தம் ஆஸ்திகர்களை என்ன செய்யுமோ தெரியவில்லை.

இந்தமாதிரி மசோதாவைக் கொண்டுவந்து அனாவச்யமாய் டாக்டர் முத்துலக்ஷ்மி பொதுஜனங்களையும் கவர்ன்மெண்டாரையும் எதற்காக ஹிம்ஸிக்கவேண்டுமென்று நாங்களும்தான் வருத்தப்படுகிறோம்; உபயோகமில்லாத இவ்வித வார்த்தைகளால் யாதொரு பயனும் நேருவதற்கில்லை.

இந்த பால்யவிவாஹத்தால் சரீரத்திலுள்ள அவயவங்களுக்கு நல்ல பலம் ஏற்படுவதற்குள் கர்ப்பம் தரிக்கும்படி நேருவதால் 4-வது 6-வது மாதத்தில் கர்ப்பவிச்சதியும் பிரஸவகாலத்தில் அதிக சிரமமும்குழந்தைகள் புஷ்டியில்லாமலும்ஏற்படுகின்றது என்கிற அபிப்பிராயத்தையும் வெளியிட்டிருக்கிறார்.

பால்ய விவாகம் செய்த ஸ்திரீகளெல்லாம் உடனே அவச்யம் கர்பவதிகளாக ஆகிவிடுகிறார்கள் என்கிற நியமமில்லை பால்ய விவாகம் பெற்ற ஸ்திரீகளில் பலர் கர்பவதிகளாகாமலும் பலர் 16 18 வயதிற்குப் பிறகும் கர்பவதிகளாகவும் இருக்கிறார்கள் 14-வயதிற்குள் கர்பமாகிறவர்கள் மிகக் குறைவே அவர்களிலும் அதிக சிரமமில்லாமல் பிரஸவித்தவர்கள் பலர் இருக்கிறார்கள் அவர்கள் குழந்தைகளும் ஸௌக்கியமாயிருக்கின்றன சில ஸ்திரீகளுக்கு அதிக சிரமம் ஏற்படும் அந்தமாதிரி சமயத்தில்தான் டாக்டர்களை எதிர்பார்ப்பார்கள் 100-க்கு 10-நெம்பர் இவ்விதமிருப்பதே டாக்டர்கள் பார்த்துவிட்டு உலகிலுள்ள எல்லா ஸ்திரீகளும் இவ்விதமே கஷ்டப்படுகிறார்கள் என்று இவர்கள் அபிப்பிராயம் கொடுத்தால் அதை உண்மையாக அவ்விதமனுபவமில்லாதவர்கள் எப்படி நம்பமுடியும் (தொடரும்)

உபபத்திராதிபர்.

விவாஹ மசோதா.

வயது நிர்ணயம் அவசியமா ?

தற்காலம் தலைவிரித்தாடும் விவாஹவயது மசோதாவானது சில ஜாதியினர்களுக்கு ஸௌகர்யமாயிருந்தபோதிலும் முக்கியமாக ப்ராமணர்களாகவும் இருக்கின்ற சிலரைப்பலவித உபத்ரவங்களுக்குள்ளாக்குகின்றது. இம்மசோதாவிற்கு அனுகூலமாயிருக்கின்ற மஹான்கள் சிலர் சாஸ்திர பிரமாணங்கள் எல்லாவற்றையும் அடியோடு தள்ளிவிட்டு, விவாஹவயதை உயர்த்துவதற்கு வைத்தியம் ஜனசமூகச் சீர்திருத்தம், சம்மந்தமான சில காரணங்களைக் கூறுகின்றனர். சுருதிகள் ஸ்மிருதிகள் இன்னும் பல க்ரந்தங்கள் இவைகளின் வாக்கியங்கள் சிலவற்றை எல்லாம் ஆராய்வோமாகில் இம்மசோதாவானது ஹிந்துமத தர்மத்தைக்கெடுத்து ஆர்யதர்மத்தை வேரோடு பிடுங்கும் என்பதில் ஐயமில்லை. ஹிந்துக்களின் விவாஹத்தைப்பற்றி ஸர்க்கார் என்பவர் 'ஹிந்துக்களின் சட்டம்' என்ற புத்தகத்தில் அதிவிமர்சையாய் எழுதியிருக்கின்றார். அதன் சாராம்சமாவது:—

"விவாஹத்தைப் பற்றி ஹிந்துக்களின் நோக்கமென்னவென்றால் அது சாஸ்திரோக்தமான காரியம். உதாரணமாக ச்ராத்தம் கல்யாணம் முதலிய சடங்குகளைச்செய்வதற்காக ஏற்பட்ட ஓர் தெய்வீகமாயும், சாஸ்திரப் பிரமாண ரூபமாயுமுள்ள சேர்க்கை. கேவலம் விவாஹம் விஷய சுகத்துக்கு ஏற்பட்டது என்று நம்புகிறவர்களுக்கு அது ஒரு பொழுதும் சாஸ்திர ஸம்மந்தமாக ஏற்படாது. ரஜஸ்வலை ஆகும் முன் பெண்களுக்கு விவாஹம் செய்கிற காரணம் அவர்களுக்கு விஷயசுகத்தில் அச்சமயம் இச்சை ஏற்படாது என்பதுதான்' மேற்சொன்னவிஷயங்களிலிருந்து பெண்களுக்கு விவாஹம் பால்ய வயதில் சுமார் எட்டு வயதிலிருந்து பத்து வயதிற்குள்ளாகச் செய்யவேண்டியது என்று வ்யக்தமாகப் புலப்படுகிறது. மேலும் கலியாணம் பெண் ப்ரௌடையாகுமுன் செய்யவேண்டுமென்றும் தெரிகிறது. அவ்வளவு பால்ய வயதில் கலியாணம் செய்வதன் பலனாக அப்பெண்ணின் பர்த்தாவின் வீட்டிலுள்ள பழக்க வழக்கங்களுடைய மனதை ஒத்துப்போகும்படி மாற்றப்ப்ரமேயம் ஏற்படுகிறது. வயது உயர்ந்த பெண்களில் மனதை அசைக்க முடியாது. பெண்களுக்கு

ரஜஸ்வலையான பிறகுகலியாணம் செய்விப்பதானது மிகவும்அசாஸ்தரீயமென்று பிராமணர்களால் கருதப்படுகிறது. பிரௌடா விவாகமான பெண்கள் வைதீகமானசாஸ்திரோக்தமான காரியங்களில் தன்கணவனுக்கு உதவிசெய்ய அனர்ஹமுள்ளவராகிறுர்கள். ப்ரௌடா விவாஹத்தைச் செய்விக்கின்ற பெண்ணின் தாய் தந்தையர்கள் மூத்தசகோதரன் எல்லோரும்இவர்கள் யஸ்மிருதி22, 23-வதுவாக்கியங்களில், ஜாதிப்ரஷ்டம்' என்று சொல்லப்படுகிறுர்கள்.இச்சந்தர்ப்பத்தில் யான் ஓர் ஐரோப்பிய அட்வொகெட்ஜெனரல்வாக்யங்களைச் சொல்ல விரும்புகின்றேன்.பெண்களுக்குப்ரௌடாவிவாஹம் செய்வித்து, தற்சமயம் பழக்கத்தில் நடந்துவரும் வரதக்ஷிணை வழக்கமும் இருந்துவருமானுல் ஓர் ஏழைத் தகப்பன் தன் பெண்ணின் கலியாணத்தை ஸகஜமாய் ஒத்தி வைக்கக்கூடும் நாளடைவில் விவாஹமாகாத பெண்களின் ஸங்கியை ஜாஸ்தியாய் விடும். கொஞ்சநாளில் தகப்பனை இழக்கநேரிடுகிறது. பிறகு அவ்வநாதைகள் அவர்களின் ஸகோதரர்கள் ஸகோதரர்களின் மனைவிகளின் தயவின் கீழ் ஜீவிக்கநேரிடும். ஐயோ பாவம்! சகோதரர்களின் மனைவிகளா வரதக்ஷிணை முதலியவை கொடுத்து கலியாணம் செய்விக்க மனம் துணிவார்கள்."

பெண்களின் கலியாண வயதை உயர்த்த வேண்டுமென்ற நோக்கங்கொண்ட இம்மசோதா ஒருஸமயம் வியபாசாரித்தனத்தை வ்யாபிக்கச் செய்துவிடுமோவென்று அஞ்சுகிறேன்; மகாகனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரிகளால் கொண்டுவரப்பட்ட "ப்ரௌடா விவாஹ மசோதாவை அட்வோகேட் ஜெனரல் சுருதி ஸ்மிருதி முதலியவைகளின் வாக்கியங்களைக் கொண்டு இந்துக்களுக்கு ஒவ்வாது என்று சொல்லிவிட்டார். இப்பொழுது கொண்டு வந்திருக்கும் மசோதா எப்படி அங்கீகாரம் பண்ணத்தக்கது. தேவர்களால் விதிக்கப்பட்டுள்ளதாயும் தொன்றுதொட்டு அனுஷ்டானத்தில் வழங்குகின்றதாயுமுள்ள, வழக்கங்களை, ஒரு நிமிஷத்தில் அடியோடு மாற்றயாரால் முடியும்? இம்மசோதாவைச் சட்டமாக்கி விட்டால் பிரதிதினமும், கோர்ட்டுகளில் புருஷர்கள் பெண்டிர்கள் வந்து நிர்க்கத்தான் பொழுது சரியாய் விடும். ஸ்வதர்மம் நாசத்தை அடையும்.

ஆகையால் இம்மசோதாவைக்கொண்டு வந்தவர்கள் ஜனங்களுக்கு ஏதாயினும் ஹிதம் செய்ய எண்ணில், தயவுசெய்து ஏழை

களுக்கு நல்ல உணவு அளிக்கவும், வைத்திய உதவி செய்யவும் கிராமங்களின் பழைய பழக்க வழக்கங்களைப் புதுப்பிக்கவும் பிரயத்தனம் செய்தல் நலம் என்று திருவிடைமருதூரிலிருந்து ஸ்ரீமான் டி எஸ். ஸ்ரீனிவாஸன் எழுதுகிறார்.

விவாஹவயது மசோதா கண்டனங்களின்கூட்டங்கள்.

நாகூர்.

இவ்வூர் இந்து மகாஜனங்களால் 4-2-28 இந்து மதாபிமான சங்கத்தின் ஆதரவின் கீழ் நடத்தப்பட்ட பொதுஜனக் கூட்டத்தில் நாகை வக்கீல் ஸ்ரீமான் என். சாம்பசிவய்யர் பி.ஏ.,பி.எல். அவர்கள் அக்கிராஸனம் வகித்து ஷை பில் பாசாகும் பக்ஷத்தில் இந்து சமூகத்திற்கு ஏற்படும் தீங்குகளைவிஸ்தாரமாக எடுத்துக் காட்டியபின் இவ்வூர் ஸ்ரீமான் டி. வீராசாமி அய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு என். கனகசபாபதி செட்டியார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு எல்லோராலும் ஏகமனதாய் ஷை கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது விவாத்தை மேன்மை தங்கிய இந்தியா ராஜப்ரதிநிதி அவர்களுக்கும், சென்னை கவர்னர் அவர்களுக்கும் மகஸர் அனுப்ப வேணுமென்று முடிவு செய்து அந்தப்படி அனுப்பப்பட்டது. N K ஸோமசுந்தரமய்யர்

பண்ணுருட்டி அக்கிரஹாரம் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி ஸன்னதியில் ஸநாதன தர்மாபிமானிகளின் முயற்சியினால் 17-2-28 வெள்ளிக்கிறமை மாலை 6-மணிக்கு பிரும்மஸ்ரீ வக்கீல் R. தேவநாதாச்சாரியார் அவர்களின் தலைமையின் கீழ் ஒரு மஹாநாடு கூட்டப்பட்டது புதுப்பேட்டை கோட்லாம் பாக்கம் லிங்கா வரட்டிப் பாளையம் திருவதி முதலான கிராமங்களில் இருந்தும் டவுனிலுள்ள எல்லாமுக்கியஸ்தர்களும் விஜயம்செய்திருந்தார்கள்

சென்னையிலும் டில்லியிலும் சட்டஸபைகளில் முறையே Mis டாக்டர் முத்துலெக்ஷ்மி ரெட்டி அவர்களாலும் Mr ஹரவிலாஸ் ஸாரதா அவர்களாலும் கொண்டுவரும் "விவாஹவயது நிர்ணய மசோதாவை சட்டமாக்கக் கூடாது" என்ற விஷயமாய் காவேரிப்பட்டணம் பிரஸங்கவாசஸ்பதி பிரும்மஸ்ரீ சூர்யநாராயண பாகவதர் அவர்களால் அனேக சுருதி ஸ்மிருதி புராண சாஸ்திரப் பிரமாணங்களுடன் 11-மணி வரையில் நீண்டதோர் உபன்யாஸம் நடைபெற்று மஹாஜனங்களினால் ஷை மசோதாவைக் கண்டனம் செய்தும் பல தீர்மானங்களையும் செய்து ஷை தீர்மானங்களின் காபியை சென்னை HE, THE கவர்னர் அவர்களுக்கும் HE,THE இந்தியா வைசிராய் துரை அவர்களுக்கும் அனுப்பப் பட்டிருக்கிறது பொதுநலப்பிரியன்